# 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு கேலிவதை செய்தலைத் தடுத்தல் சட்டம்

(தமிழ்நாடு சட்ட எண் 7/1997)

(2003, ஜூன் 30 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Prohibition of Ragging Act, 1997

**(Tamil Nadu Act No.7 of 1997)**

**(As on the 30th June, 2003)**

தமிழாக்கம்:
சட்ட (ஆட்சி மொழிப்பிரிவு)த் துறை
தலைமைச் செயலகம்
சென்னை–600 009

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
2003

Price Rs. 9.00

## 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கேலிவதை செய்தலைத் தடுத்தல் சட்டம்
## (தமிழ்நாடு சட்ட எண் 7/1997)

பிரிவுகளின் அமைப்பு


| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம். | 1 |
| 2. | பொருள்வரையறைகள். | 1 |
| 3. | கேலிவதைசெய்தலைத் தடுத்தல். | 1 |
| 4. | கேலிவதைசெய்வதற்குத் தண்டனை. | 1 |
| 5. | மாணவரைக் கல்வி நிறுவனத்திலிருந்து நீக்குதல். | 1 |
| 6. | மாணவரைத் தற்காலிகமாக கல்வி நிறுவனத்திலிருந்து நீக்கி வைத்தல். | 2 |
| 7. | உடந்தையெனக் கொள்ளப்படுதல். | 2 |
| 8. | விதிகளைச் செய்வதற்கான அதிகாரம். | 2 |
| 9. | நீக்கறவும் காப்பும். | 2 |


---

Price Rs. 9.00

## 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு கேலிவதைசெய்தலைத் தடுத்தல் சட்டம்
## (தமிழ்நாடு சட்ட எண் 7/1997)

[ஆளுநரின் ஏற்பிசைவை 1997ஆம் ஆண்டு பிப்ரவரி 14 அன்று பெற்று, தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் 1997ஆம் ஆண்டு பிப்ரவரி 17 அன்று முதன்முதலாக வெளியிடப்பட்டது.]

தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள கல்வி நிறுவனங்களில் கேலிவதை செய்தலைத் தடுப்பதற்கான சட்டம்.

இந்தியக் குடியரசின் நாற்பத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1.(1) இந்தச் சட்டம், 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு கேலிவதை செய்தலைத் தடுத்தல் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, 1996 டிசம்பர் திங்கள் 19ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி, "கேலிவதை செய்தல்" என்றால், கல்வி நிலையம் எதிலும் உள்ள மாணவர் ஒருவருக்கு எதிராக இரைச்சல் கூடிய ஒழுங்கு முறையற்ற நடத்தையை வெளிப்படுத்துவது என்றும், அவருக்கு உடல் அளவில் அல்லது மன அளவிலான கேட்டினை அல்லது அவருக்கு பீதியை அல்லது பயத்தினை அல்லது அவமானத்தினை அல்லது மனக்குழப்பத்தினை உண்டாக்குவது அல்லது பெரும்பாலும் உண்டாக்குவது என்றும் பொருள்படும்; மற்றும் அது,——

(a) அத்தகைய மாணவரை சிறுகுறும்பு செய்து வெறுப்பூட்டுவதை, அவரிடம் தகாத சொற்களைப் பயன்படுத்துதை, அவரிடம் செயற்குறும்பு செய்து விளையாடுவதை, அல்லது அவருக்கு காயத்தை உண்டாக்குவதை, அல்லது

(b) புதிய மாணவரை, செயல் எதனையும் செய்யுமாறு அல்லது சாதாரண நிலையில் அத்தகைய மாணவர் விரும்பிச் செய்யாத செயல் எதையும் செய்யுமாறு கேட்பதை

உள்ளடக்கும்.

கேலிவதை செய்தலைத் தடுத்தல்.

3. கல்வி நிறுவனம் எதற்குள்ளுமோ அல்லது வெளியேயோ "கேலிவதை செய்தல்" தடை செய்யப்படுகிறது.

4. கல்வி நிறுவனம் எதற்குள்ளுமோ அல்லது வெளியேயோ, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கேலிவதை செய்கின்ற, அதில் பங்குகொள்கின்ற, அதற்கு உடந்தையாயிருக்கின்ற அல்லது அதனைப் பரப்புகின்ற எவர் ஒருவரும், இரண்டாண்டுகள் வரை நீடிக்கக்கூடியதொரு கால அளவிற்குச் சிறைத் தண்டனை விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு அவர் பத்தாயிரம் ரூபாய்கள் வரை நீட்டிக்கக்கூடிய பணத்தண்டனைக்கு உள்ளாக்கப்படுதலும் வேண்டும்.

மாணவரைக் கல்வி நிறுவனத்திலிருந்து நீக்குதல்.

5. 4ஆம் பிரிவின்படியான குற்றச்செயலைச் செய்துள்ளதாக தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள மாணவர் எவரும், கல்வி நிறுவனத்திலிருந்து நீக்கப்படுதலும் வேண்டும்; மற்றும் அத்தகைய மாணவர் கல்வி நிறுவனம் எதிலும் சேர்த்துக் கொள்ளப்படுதல் ஆகாது.

மாணவரைத் தற்காலிகமாக கல்வி நிறுவனத்திலிருந்து நீக்கி வைத்தல்.

6. (1) முன்சென்ற வகைமுறைகளுக்கு குந்தகமின்றி, கல்வி நிறுவனம் ஒன்றின் தலைவரிடமோ, அல்லது அக்கல்வி நிலையத்தின் மேலாண்மையைப் பொறுப்பில் கொண்டுள்ள நபர் எவரிடமோ, மாணவர் எவரும் கேலிவதை செய்வது குறித்து முறையீடு செய்கிறபோதெல்லாம், அத்தகைய கல்வி நிறுவனத்தின் தலைவரானவர் அல்லது அக்கல்வி நிறுவனத்தின் மேலாண்மையைப் பொறுப்பில் கொண்டுள்ள நபரானவர் அது குறித்து உடனடியாக விசாரணை செய்தல் வேண்டும், என்பதோடு அது உண்மையானதென அறியப்படுமாயின் அக்குற்றச் செயலைச் செய்துள்ள மாணவரை அக்கல்வி நிறுவனத்திலிருந்து தற்காலிகமாக நீக்கிவைத்தலும் வேண்டும்.

(2).(1)ஆம் உட்பிரிவின்படி மாணவர் எவரும் கேலிவதை செய்வதில் ஈடுபட்டுள்ளார் என்னும்படியான, கல்வி நிறுவனத் தலைவரின் அல்லது கல்வி நிறுவனத்தின் மேலாண்மையைப் பொறுப்பில் கொண்டுள்ள நபர் ஒருவரின் முடிவானது இறுதியானதாகும்.

உடந்தையெனக் கொள்ளப் படுதல்.

7. கேலிவதை செய்தல் குறித்த முறையீடு ஒன்று செய்யப்படுகிற போது, கல்வி நிறுவனத்தின் தலைவரானவர் அல்லது அக்கல்வி நிறுவனத்தின் மேலாண்மையைப் பொறுப்பில் கொண்டுள்ள நபரானவர், 6ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு தவறுவாறாயின் அல்லது அது குறித்து அசட்டையாக இருப்பாராயின், "கேலிவதை செய்தல்" எனும் குற்றச் செயலைச் செய்வதற்கு அத்தகைய நபரானவர் உடந்தையாக இருந்தாரெனக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அவர் 4ஆம் பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளவாறு தண்டிக்கப்படுதல் வேண்டும்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

8.(1) மாநில அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும், நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படிச் செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் அவை ஒரு குறிப்பிட்ட நாளில் நடைமுறைக்கு வரும் என வெளிப்படையாகத் தெரிவிக்கப்படாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்படும் நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும், அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடரோ, அல்லது அடுத்துவரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்பு, அப்பேரவை, அந்த விதியில் மாற்றமைவு எதனையும் செய்யுமாயின் அல்லது அப்பேரவை, அந்த விதி செய்யப்படக்கூடாது என்று முடிவுசெய்யுமாயின், அவ்விதி, அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வரும் அல்லது, நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராமலே போகும், எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றியும் இருத்தல் வேண்டும்.

நீக்கறவும் காப்பும்.

9. (1) 1996ஆம் ஆண்டு தமிழ்நாடு கேலிவதை செய்தலைத் தடுத்தல் அவசரச் சட்டமானது, இதன்மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1996.

(2) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவும், அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

———

N.T.P. SUPPLIED BY THE DEPARTMENT
PRINTED AT GOVERNMENT CENTRAL PRESS, CHENNAI-600 079.